**ஜூலை – 01**

# TNPSC துளிகள்

- கோவா கப்பல் கட்டும் நிறுவனம் லிமிடெட் (GSL) தயாரித்த எட்டுக் கப்பல்களின் வரிசையில் 'ஆதம்யா' என்ற முதலாவது விரைவு ரோந்துக் கப்பலினை (FPV) இந்தியக் கடலோரக் காவல்படையில் (ICG) இணைத்துள்ளது.
- APEDA (வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம்) ஆனது, இந்தியாவின் முதல் ஒரு டன் எடையிலான ரோஜா வாசனை கொண்ட லிச்சிப் பழங்கள் தொகுப்பினைப் பஞ்சாபின் பதான்கோட்டில் இருந்து தோஹாவிற்கு (கத்தார்) அனுப்பியுள்ளது.
- பிரக்ஞானந்தா தாஷ்கண்டில் (உஸ்பெகிஸ்தான்) நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு உஸ் செஸ் கோப்பை மாஸ்டர்ஸ் போட்டியில் வென்று உலக அளவில் 4வது இடத்தையும் இந்தியாவின் மிக உயர்ந்தத் தரவரிசையில் உள்ள சதுரங்க வீரராகவும் ஆனார்.
- வருவாய்ப் புலனாய்வு இயக்குநரகம் (DRI) ஆனது, மூன்றாம் தரப்பு நாடுகள் வழியாக, முக்கியமாக துபாய், ஐக்கிய அரபு அமீரகம் வழியாக பாகிஸ்தான் நாட்டில் உற்பத்தி ஆகும் பொருட்களை சட்ட விரோதமாக இறக்குமதி செய்வதைத் தடுப்பதற்காக "டீப் மேனிஃபெஸ்ட் நடவடிக்கையினை" தொடங்கியது.
- கேரளாவில் 2022 ஆம் ஆண்டில் 5,315 பாதிப்புகள் மற்றும் 290 உயிரிழப்புகளாக இருந்த எலிக்காய்ச்சல் (லெப்டோஸ்பிரோசிஸ்) பாதிப்புகள் மற்றும் உயிரிழப்புகள் ஆனது 2024 ஆம் ஆண்டில் 5,980 பாதிப்புகள் மற்றும் 394 உயிரிழப்புகளாக அதிகரித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.
    - 2025 ஆம் ஆண்டு ஜூன் 09 ஆம் தேதி வரையில் 1,451 பாதிப்புகள் மற்றும் 74 உயிர் இழப்புகள் பதிவாகியுள்ளன.
- ராஜஸ்தான் ரந்தம்போர் அருகே அமைந்துள்ள டெல்லி-மும்பை விரைவுச் சாலையின் 12 கிலோ மீட்டர் நீளமுள்ள பகுதியில் இந்தியா தனது முதல் விலங்குகளுக்கான மேம் பால வழித் தடத்தினைத் தொடங்கியுள்ளது.
    - இதில் ஐந்து வனவிலங்கு மேம்பாலங்களைக் கொண்டும், விலங்குகளின் மிகவும் பாதுகாப்பான நடமாட்டத்திற்கான நாட்டின் மிக நீளமானச் சுரங்கப்பாதையைக் கொண்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## 2030 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய பிறப்பு மற்றும் இறப்புப் பதிவு

- இந்தியா உட்பட ஆசிய-பசிபிக் பகுதிகளில் உள்ள அரசாங்கங்கள் பாங்காக்கில் ஒரு முக்கிய தீர்மானத்தை ஏற்றுக்கொண்டன.
- 2030 ஆம் ஆண்டிற்குள் அனைத்துப் பிறப்புகளும் பதிவு செய்யப் படுவதையும் அனைத்து இறப்புகளும் பதிவு செய்யப் படுவதையும் உறுதி செய்வதே இதன் முக்கிய குறிக்கோள் ஆகும்.
- தாய்லாந்தின் பாங்காக் நகரில் நடைபெற்ற குடிமைப் பதிவு மற்றும் முக்கியப் புள்ளி விவரங்கள் (CRVS) தொடர்பான மூன்றாவது அமைச்சர்கள் மாநாட்டில் இந்த ஒரு முடிவு ஆனது மேற்கொள்ளப்பட்டது.
- CRVS என்பது ஒரு சட்ட அமைப்பின் கீழ் பிறப்புகள், இறப்புகள், திருமணங்கள் மற்றும் விவாகரத்துகள் போன்ற முக்கிய வாழ்க்கை நிகழ்வுகளின் அதிகாரப்பூர்வ பதிவைக்

குறிக்கிறது.

- CRVS புள்ளிவிவரங்கள் கருத்தக்கத்திற்கான பின்னணியில் உள்ள முன்னணி அமைப்பு UN ESCAP (ஐக்கிய நாடுகளின் ஆசியா மற்றும் பசிபிக் பொருளாதார மற்றும் சமூக ஆணையம்) ஆகும்.
- இந்தத் தீர்மானம் ஆனது, பிறப்பு பதிவு உட்பட அனைவருக்குமான ஒரு சட்டப் பூர்வ அடையாளம் 16.9 என்ற SDG இலக்கினை ஆதரிக்கிறது.
- 2012 ஆம் ஆண்டு முதல், பதிவு செய்யப் படாத ஐந்து வயத்திற்குட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 135 மில்லியனிலிருந்து 51 மில்லியனாகக் குறைந்துள்ளது.
- 29 நாடுகள் தற்போது 90 சதவீதத்திற்கும் மேற்பட்ட பிறப்புகளைப் பதிவு செய்கின்றன, மேலும் 30 நாடுகள் இறப்புகளுக்கும் அத்தகைய சதவீதத்திலானப் பதிவுகளைப் பதிவு செய்கின்றன.
- இந்த முன்னேற்றம் பதிவவாகியிருந்த போதிலும், 14 மில்லியன் குழந்தைகள் இன்னும் ஒரு வயதிற்குள் தங்கள் பிறப்புகளைப் பதிவு செய்யவில்லை.
- ஒவ்வோர் ஆண்டும் சுமார் 6.9 மில்லியன் உயிரிழப்புகள் பெரும்பாலும் மருத்துவ மனைகளுக்கு வெளியே அல்லது தொலைதூரப் பகுதிகளில் பதிவு செய்யப்படாமல் போகின்றன.




## SCO பாதுகாப்பு அமைச்சர்களின் கூட்டு அறிக்கை

- சீனாவின் கிங்டாவோவில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் முன் வைக்கப்பட்ட ஒரு கூட்டு அறிக்கையில் கையெழுத்திட இந்தியா மறுத்துவிட்டது.
- பன்னாட்டுத் தீவிரவாதம் குறித்து எந்த குறிப்பிடலும் இல்லாதது குறித்து இந்தியாவின் அதிருப்தி காரணமாக இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.
- SCO சாசனத்தின் படி, முடிவுகள் ஒருமித்த கருத்தினால் எடுக்கப்படுகின்றன, மேலும் எந்த ஒரு உறுப்பினரும் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றால் மட்டுமே அந்த அறிக்கை ஏற்றுக் கொள்ளப்படும்.
- SCO ஆனது 2001 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஓர் அரசுகளுக்கிடையேயான குழு ஆகும்.

- இந்தியா 2017 ஆம் ஆண்டில் இந்த அமைப்பில் முழு உறுப்பினரானது.
- இதன் தற்போதைய உறுப்பினர்களில் கஜகஸ்தான், சீனா, கிர்கிஸ்தான், பாகிஸ்தான், ரஷ்யா, தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், ஈரான், பெலாரஸ் மற்றும் இந்தியா ஆகியன அடங்கும்.




## நேட்டோ உச்சி மாநாடு 2025




- நேட்டோ நாடுகளின் 2025 ஆம் ஆண்டு உச்சி மாநாடு ஆனது நெதர்லாந்தின் ஹேக் நகரில் நடைபெற்றது.
- நேட்டோ அமைப்பின் உறுப்பினர் நாடுகள், முக்கியப் பாதுகாப்பு அமைப்புகளுக்கு 3.5% மற்றும் உள்கட்டமைப்பு மற்றும் புத்தாக்கம் போன்றவற்றுடன் தொடர்புடையச் செலவுகளுக்கு சுமார் 1.5% ஆகியவற்றினை உள்ளடக்கியதாக அதன் பாதுகாப்புச் செலவினங்களை அவற்றின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5% ஆக அதிகரிக்க ஒப்புக் கொண்டுள்ளன.
- அவற்றின் முன்னேற்றம் குறித்த மதிப்பாய்வுடன் சேர்த்து 2029 ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் தேர்தலுக்குப் பிறகு, இந்த இலக்கை அடைவதற்கான அவற்றின் வருடாந்திரத் திட்டங்களை உறுப்பினர் நாடுகள் சமர்ப்பிக்க வேண்டும்.
- 2024 ஆம் ஆண்டில், போலந்து, எஸ்டோனியா மற்றும் லாட்வியா மட்டுமே சுமார் 3 சதவீதத்திற்கும் அதிகமாகச் செலவிட்டன.
- பாதுகாப்புத் துறைக்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.24% மட்டுமே செலவழித்த ஸ்பெயின், விதிமுறைகளுக்கு இணங்காததற்காக அமெரிக்க வர்த்தகத் தடைகளை

எதிர்கொண்டது.


- தற்போது, நேட்டோவில் 32 உறுப்பினர் நாடுகள் உள்ளன என்பதோடு இந்தியாவானது நேட்டோ அமைப்பில் உறுப்பினராக இடம் பெறவில்லை.

# பொருளாதாரச் செய்திகள்

## வேளாண் விளைபொருள் உற்பத்தி குறித்த வருடாந்திர அறிக்கை

- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகம் (MoSPI) ஆனது, "Statistical Report on Value of Output from Agriculture and Allied Sectors – வேளாண்மை மற்றும் அதன் சார்பு துறைகளின் உற்பத்தி மதிப்பு குறித்த புள்ளி விவர அறிக்கையை (2011-12 முதல் 2023-24 வரை)" வெளியிட்டுள்ளது.
- நடப்பு விலையில் வேளாண்மை மற்றும் அதன் சார்பு துறைகளின் மொத்த மதிப்புக் கூட்டல் (GVA) ஆனது 2023-24 ஆம் ஆண்டில் சுமார் 225% அதிகரித்து 4,878 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்தது.
- இது 2011-12 ஆம் ஆண்டில் 1,502 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்தது.
- நிலையான விலையில் உற்பத்தியின் மொத்த மதிப்பு (GVO) 54.6% அதிகரித்து, 2011-12 ஆம் ஆண்டில் 1,908 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்தது என்பதோடு இது 2023-24 ஆம் ஆண்டில் 2,949 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்தது.
- 2023-24 ஆம் ஆண்டில் சுமார் 1,595 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்த பயிர்ச் சாகுபடித் துறையின் மொத்த GVO ஆனது, மொத்த வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்பு உடைய துறைகளின் GVO உற்பத்தியில் 54.1% பங்களித்தது.
- தானியங்கள் மற்றும் பழங்கள் & காய்கறிகள் உற்பத்தியானது, 2023-24 ஆம் ஆண்டில் பயிர் GVO உற்பத்தியில் 52.5% பங்களித்தன.
- 2023-24 ஆம் ஆண்டில் அனைத்துத் தானியங்களின் GVO உற்பத்தியில் நெல் மற்றும் கோதுமையின் பங்கு சுமார் 85% ஆகும்.
- வாழைப்பழத்தின் GVO ஆனது (சுமார் 47.0 ஆயிரம் கோடி) 2023-24 ஆம் ஆண்டில் மாம்பழத்தின் (46.1 ஆயிரம் கோடி) GVO பங்கினை விட அதிகமாக இருந்தது.
- 2011-12 ஆம் ஆண்டில் 21.3 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்த உருளைக்கிழங்கு உற்பத்தி ஆனது 2023-24 ஆம் ஆண்டில் சுமார் 37.2 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்து, காய்கறி உற்பத்தியில் அதிகளவிலான பங்களிப்பாளராகத் தொடர்ந்து திகழ்கிறது.
- 2011-12 ஆம் ஆண்டில் 17.4 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்த மலர்கள் வளர்ப்பு உற்பத்தி ஆனது 2023-24 ஆம் ஆண்டில் சுமார் 28.1 ஆயிரம் கோடி ரூபாயாக சுமார் இரட்டிப்பாகி உள்ளது.
- 2011-12 ஆம் ஆண்டில் 488 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்த கால்நடைப் பொருட்களின் GVO ஆனது 2023-24 ஆம் ஆண்டில் 919 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்தது.
- 2011-12 ஆம் ஆண்டில் சுமார் 67.2 சதவீதமாக இருந்த கால்நடை வளர்ப்புத் துறையில் பால் உற்பத்தியின் GVO பங்கு ஆனது 2023-24 ஆம் ஆண்டில் சுமார் 65.9% ஆக சற்றுக் குறைந்தது.
- 2011-12 ஆம் ஆண்டில் 19.7 சதவீதமாக இருந்த கால்நடைகள் துறையில் இறைச்சியின் GVO பங்கு 2023-24 ஆம் ஆண்டில் 24.1% ஆக உயர்ந்தது.
- வனவியல் மற்றும் மரம் வெட்டுதல் GVO ஆனது 2011-12 ஆம் ஆண்டில் சுமார் 149 ஆயிரம் கோடி ரூபாயிலிருந்து 2023-24 ஆம் ஆண்டில் சுமார் 227 ஆயிரம் கோடியாக அதிகரித்தது.

- வனவியல் உற்பத்தியில், 2011-12 ஆம் ஆண்டில் 49.9 சதவீதமாக இருந்த தொழில்துறை பயன்பாடு சார் மர வளர்ப்பு உற்பத்தியின் பங்கு ஆனது 2023-24 ஆம் ஆண்டில் 70.2% ஆக உயர்ந்தது.
- மீன்பிடித்தல் மற்றும் மீன்வளர்ப்பு துறையின் பங்களிப்பு ஆனது, 2011-12 ஆம் ஆண்டில் 4.2 சதவீதத்திலிருந்து 2023-24 ஆம் ஆண்டில் 7.0% ஆக உயர்ந்தது.
- 2011-12 ஆம் ஆண்டில் 57.7% ஆக இருந்த உள்நாட்டு மீன் வளர்ப்புத் துறையின் பங்கு ஆனது, 2023-24 ஆம் ஆண்டில் 50.2% ஆகக் குறைந்துள்ளது, அதே நேரத்தில் கடல் சார் மீன் வளர்ப்புத் துறையின் பங்கு 42.3 சதவீதத்திலிருந்து 49.8% ஆக உயர்ந்துள்ளது.
- பழங்கள், காய்கறிகள் மற்றும் மலர் வளர்ப்பில் மாநில வாரியானப் பங்குகள் 2011-12 மற்றும் 2023-24 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் குறிப்பிடத்தக்க அளவில் மாறின.
- உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பஞ்சாப், தெலங்கானா மற்றும் ஹரியானா ஆகியவை 2023-24 ஆம் ஆண்டில் தானிய GVO பங்கில் சுமார் 53% பங்களித்தன.
- உத்தரப் பிரதேசம் அதன் முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் மத்தியப் பிரதேசம் ஆனது சுவையூட்டுப் பொருட்கள் மற்றும் மசாலாப் பொருட்களின் GVO பங்கில் 19.2% பங்குடன் முன்னிலை பெற்றது அதைத் தொடர்ந்து கர்நாடகா (16.6%) மற்றும் குஜராத் (15.5%) உள்ளன.
- மேற்கு வங்காளம் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகியவை 2011-12 முதல் 2023-24 ஆம் ஆண்டு வரை மீன்வளத் துறையின் GVO பங்கில் சில குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் காட்டின.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## யானைகள் வளங்காப்புத் திட்டம் புதுப்பிப்பு

- யானைகள் வளங்காப்புத் திட்டத்தின் 21வது வழிகாட்டுதல் குழு கூட்டம் ஆனது உத்தரகாண்ட்டில் டேராடூனில் உள்ள இந்திரா காந்தி தேசிய வன அகாடமியில் (IGNFA) நடைபெற்றது.
- இந்தக் கூட்டமானது, இந்தியாவில் யானைகள் வளங்காப்பு முயற்சிகளின் பெரும் முன்னேற்றத்தினை மதிப்பாய்வு செய்து எதிர்கால உத்திகளைப் பற்றி விவாதித்தது.
- யானைகள் வளங்காப்புத் திட்டம் என்பது 1992 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஒரு பாதுகாப்பு முன்னெடுப்பாகும்.
- மனித-யானை மோதல் ஆனது மனித உயிர்களுக்கும் யானைகளின் பாதுகாப்புக்கும் கடுமையான அச்சுறுத்தலாக உள்ளது.

- தெற்கு மற்றும் வடகிழக்கு இந்தியாவில் நிலவும் மோதல்களை நன்கு மேலாண்மை செய்வதற்காக பிராந்திய செயல் திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.
- 3,452.4 கி.மீ நீள இரயில் பாதைகளை உள்ளடக்கிய ஆய்வுகள் நிறைவு செய்யப்பட்டு, இந்த மோதல் நிகழ்வுகளுக்கு எதிரான சில தணிப்பு நடவடிக்கைகளுக்காக 77 அதிக ஆபத்துள்ள பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- 22 மாநிலங்களில் 1,911 மரபணு குறித்த விவரங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளதுடன், காப்பு பகுதியில் வைக்கப்பட்டுள்ள யானைகளின் டிஎன்ஏ விவரக்குறிப்பு பதிவு ஆனது தொடர்ந்து நடைபெற்று வருகிறது.
- சுமார் 16,500க்கும் மேற்பட்ட சாண மாதிரிகள் சேகரிக்கப்பட்டுள்ளதுடன், வடகிழக்கு மாநிலங்களில் ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பின் முதல் கட்டம் நிறைவு அடைந்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் இறுதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப் படுகின்ற நீலகிரி யானைகள் வளங் காப்பகத்திற்கான மாதிரி யானைகள் வளங் காப்பு திட்டத்தில் (ECP) முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது.





# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலக நாடுகளின் எரிசக்தி குறித்த 74வது புள்ளிவிவர மதிப்பாய்வு

- இது கியர்னி மற்றும் KPMG நிறுவனத்துடன் இணைந்து எரிசக்தி முகமையினால் (EI) வெளியிட்ட அறிக்கையாகும்.
- இந்தியாவின் நிலக்கரி நுகர்வு ஆனது, 2024 ஆம் ஆண்டில் 4% அதிகரித்துள்ளது.
- இது ஐரோப்பா, வட அமெரிக்கா, மத்திய மற்றும் தென் அமெரிக்கா மற்றும் சுதந்திர நாடுகளின் காமன்வெல்த் அமைப்பு (CIS) ஆகியவற்றின் ஒருங்கிணைந்த நிலக்கரிப் பயன்பாட்டிற்குச் சமமாகும்.
- காற்று ஆற்றல் மற்றும் சூரிய சக்தி போன்ற தூய்மையான எரிசக்தி ஆதாரங்கள் 16% வளர்ச்சியடைந்தன.
- ஆனால் புதைபடிவ எரிபொருள் நுகர்வு இன்னும் 1 சதவீதத்திற்கும் மிக அதிகமாக உயர்ந்தது.
- இது ஆற்றலில் வெளியாகும் உலகளாவிய கார்பன் டை ஆக்சைடுக்கு ($CO_2$) சமமான வெளியேற்றத்தில் 1% அதிகரிப்புக்கு வழிவகுத்தது.

- இது சுமார் 39.3 பில்லியன் டன்களுடன் தொடர்ச்சியாக நான்காவது அதிக பதிவினைக் குறிக்கிறது.
- உலகளாவிய இயற்கை எரிவாயுத் தேவை ஆனது 2024 ஆம் ஆண்டில் 2.5% அதிகரித்து உள்ளது.
- பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (OECD) உறுப்பினர் நாடுகளில் எண்ணெய் தேவை மிகவும் நிலையாக இருந்தது ஆனால் OECD சாராதப் பிராந்தியங்களில் 1% அதிகரித்துள்ளது.
- முதன்மை எரிசக்திப் பயன்பாட்டில் நிலக்கரி 57% மற்றும் எண்ணெய் 29% பங்குடன் இந்தியாவின் எரிசக்தி நுகர்வு ஆனது 5.8% அதிகரித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் உலகளாவிய எரிசக்தித் தேவையின் ஒரு வளர்ச்சியில் சீனாவும் இந்தியாவும் இணைந்து 80% பங்கினைக் கொண்டிருந்தன.





# மாநிலச் செய்திகள்

## தேசிய பாதுகாக்கப்பட்டப் பகுதிகளில் முதலிடத்தில் கேரளா


- 2020-25 ஆம் ஆண்டிற்கான தேசியப் பூங்காக்கள் மற்றும் வனவிலங்கு சரணாலயங்கள் மீதான மேலாண்மை செயல்திறன் மதிப்பீட்டில் (MEE) கேரளா மற்றும் சண்டிகர் ஆகிய இரண்டும் 'மிகச் சிறந்த' மதிப்பெண்களைப் பெற்றன.
- சண்டிகர் ஆனது சராசரியாக சுமார் 85.16% என்ற MEE மதிப்பையும், கேரளா 76.22% மதிப்பையும் பெற்றது.
- பாதுகாக்கப்பட்டப் பகுதிகளில், எரவிகுளம் தேசியப் பூங்கா (கேரளா) மற்றும் டச்சிகம் தேசியப் பூங்கா (ஜம்மு & காஷ்மீர்) 92.97% MEE மதிப்பெண்களுடன் இதில் முதலிடத்தில் உள்ளன.
- கேரளாவைச் சேர்ந்த மதிகெட்டான் சோலைத் தேசியப் பூங்கா மற்றும் சின்னார் வன

விலங்கு சரணாலயம் ஆகியவை முதல் 10 பாதுகாக்கப்பட்டப் பகுதிகளில் ஐந்தாவது மற்றும் ஆறாவது இடத்தைப் பிடித்தன.




# இதரச் செய்திகள்

## கைலாஷ் மானசரோவர் யாத்திரை 2025




- ❖ கோவிட்-19 பெருந்தொற்று மற்றும் எல்லை சார்ந்த பதட்டச் சூழல்கள் காரணமாக ஆறு ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு, கைலாஷ் மானசரோவர் யாத்திரை 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் மீண்டும் தொடங்கியுள்ளது.
- ❖ இது மெய்க் கட்டுப்பாட்டுப் பகுதியில் (LAC) ஏற்பட்ட மோதலுக்குப் பிறகு நிகழும் முதல் இந்தியா-சீனா மக்கள் பரிமாற்றத்தைக் குறிக்கிறது.
- ❖ இந்த யாத்திரையானது ஜூன் முதல் ஆகஸ்ட் மாதம் வரையில் வெளியுறவுத் துறை அமைச்சகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- ❖ இந்த யாத்திரைக்கான இரண்டு அதிகாரப்பூர்வ வழித்தடங்கள் உத்தரக்காண்டில் உள்ள லிபுலேக் கணவாய் (1981 ஆம் ஆண்டு முதல்) மற்றும் சிக்கிமில் உள்ள நாது லா கணவாய் (2015 ஆம் ஆண்டு முதல்) ஆகும்.
- ❖ கைலாய மலை மற்றும் மானசரோவர் ஏரி ஆகியவை திபெத்தில், கைலாய மலையின் தெற்கு அடிவாரத்திற்கு அருகில் அமைந்துள்ளன.
- ❖ மானசரோவர் ஏரி உலகின் மிக உயரமான இடத்தில் உள்ள நன்னீர் ஏரியாகும்.

- இந்த யாத்திரை இந்துக்கள், பௌத்தர்கள், சமணர்கள் மற்றும் பான் சமயத்தினைப் பின்பற்றுபவர்களுக்கு அதன் சமய மற்றும் ஆன்மீக முக்கியத்துவத்திற்காக அறியப் படுகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★